திரு. முனு. ஆதி: நம்முடைய மாநிலத்திற்குள் நடைபெறுகின்ற எந்த காங்கிரஸ் கட்சி நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் சென்றாலும் அவர்கள் அரசினரால் கொடுக்கப்பட்டிருக்கிற காரிலே செல்வதால் அந்தப் பிரயாணம் கட்சிச் செலவிலே செய்யப்பட்டதா அல்லது அரசினர் செலவிலே செய்யப்பட்டதா என்பதுபற்றி பொது மக்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. அரசினர் காரிலே செல்லும்போது அது அரசினர் செலவில் இருக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரயாணத்தைப்பற்றிக் கேள்வி கேட்டால், யாருடைய செலவிலே அந்தப் பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது என்று நான் விவரம் கொடுக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: சர்க்கார் காரியங்களுக்காகக் கிராமங்களுக்கு அமைச்சர்கள் செல்லும்போது, சர்க்காருடைய செலவில் சென்றாலுங்கூட, அந்தக் காரியங்களுக்காகச் சென்ற விடத்தில் கட்சிக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளுவதில் தவறு இல்லை என்பதை அமைச்சர்கள் உணர்ந்து, தொடர்ந்து கட்சி வேலைகளில் ஈடுபடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை முன்னமேயே உணர்ந்திருக்கிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் யாவரும் அறிவார்கள்.

திரு. முனு. ஆதி: எதிர்த் தரப்பிலே ஒரு கனம் உறுப்பினர், 'அமைச்சர்களின் சுற்றுப் பயணத்தின்போது கட்சி வேலையைக் கூடச் செய்யலாம், அதில் தவறு இல்லை' என்று கூறினார். அதே போன்று தாம்பரத்தில் காங்கிரஸ் கூட்டத்திற்கு வருகிற போது அரசினர் காரிலே அமைச்சர் வருவதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட பயணம் கட்சியின் செலவில் செய்யப்பட்டதா? அரசினர் செலவில் செய்யப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அமைச்சர்கள் அரசாங்கம் கொடுத்திருக்கும் காரிலே பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் எந்த அலுவலுக்குப் போனாலும் அதில் தான் போகிறார்கள். தனியாகக் கார் வைத்துக்கொள்ளுவது இல்லை.

நகராண்மைக் கழகங்கள் (சட்டசபை உறுப்பினர்களின் பங்கு)

* **5 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்:** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகர எல்லைக்குள் வசிக்கும் சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்களை நகராண்மைக் கழகங்களில் கௌரவ அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

29th January 1963]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) பாராளுமன்ற அங்கத்தினர்களும், மாநிலச் சட்டப்பேரவை அங்கத்தினர்களும் நாட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிற பல்வேறு அபிவிருத்தி வேலை கள் பற்றி நன்கு அறிந்துள்ள காரணத்தினால், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற ஸ்தாபனங் களில் அவர்கள் கலந்து கொள்வதற்கு வகை செய்ய வேண்டும் என்ற கருத்து 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 25-ம் தேதியில் நடை பெற்ற மாநில ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது 1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் ஷரத்துக்களின்படி எம்.எல்.ஏ.-க்களும், எம்.எல்.சி.-க்களும் பஞ்சா யத்து யூனியன் கவுன்சில்களின் கூட்டங்களில் கலந்து கொள்ள லாம். ஆனால் அந்தக் கூட்டங்களில் அவர்களுக்கு வோட்டுரிமை கிடையாது. கவுன்சில் தலைவராக அல்லது துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெறவும் அவர்களுக்குரிமை கிடையாது. 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டத்தில் இத்தகைய ஷரத்து எதுவுமில்லை. இத்தகைய ஷரத்து ஒன்றை 1920-ம் ஆண்டு சென்னை ஜில்லா முனிசிபாலிடிகள் சட்டத்தில் சேர்ப்பது பற்றி அரசினர் ஆலோசித்து வருகின்றனர்.

(*a*) & (*b*) A suggestion was made at the meeting of the State Informal Consultative Committee held on 25th July 1961 that the Members of Parliament and Members of State Legislature shall be associated with institutions such as panchayat union councils and municipal councils by virtue of their wider knowledge of these various developmental activities taking place in the country. Under the provisions of the Madras Panchayats Act, 1958, Members of the Legislative Assembly and Members of the Legislative Council can take part in the proceedings of the panchayat union councils without a right to vote or to be elected as chairman or vice-chairman of the council. There is no such provision in the Madras District Municipalities Act, 1920. A proposal to include a similar provision in the Madras District Municipalities Act, 1920, is under the consideration of the Government.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : சட்டசபை, பாராளு மன்ற உறுப்பினர்கள் நகர சபைகளில் கௌரவ உறுப்பினர்களா கப் பணி புரியவேண்டும் என்ற திட்டம் எப்பொழுது அமுலுக் குக் கொண்டுவரப்படும் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது ?

Pasteurization Scheme (Madurai)

* 6 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of Madurai Pasteurisation Scheme included in the Third Five-Year Plan, and the nature and extent of help offered by the UNICEF and the FAO?